விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 25 புதன்கிழமை (11.10.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 287

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# பேச்சு சுமுகமாக நடப்பதென்பது சர்வதேசத்தின் கையிலேயே உள்ளது

## விடுதலைப்புலிகள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் பேச்சு நடப்பதா? இல்லையா? என்பது எமது கையில் இல்லை. சர்வதேச சமூகத்தின் கைகளிலும் அரசின் கைகளிலும்தான் உள்ளது என விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார். அரசின் தாக்குதல் நடவடிக்கைகள் தொடருமானால் தமது நிலைப்பாட்டை மீள் பரிசீலனை செய்யவேண்டி வரும் என்றும் அவர் தெரிவித்தார். (04 ஆம் பக்கம் பார்க்க)



# அதிகாரப் பகிர்வு குறித்து பேசமுன் ஏழு விடயங்கள் குறித்து ஆராய்வு!

## கெஹலிய ரம்புக்வெல தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒக்டோபர் மாத இறுதியில் இடம் பெறவுள்ள பேச்சுவார்த்தையில் வடக்கு-கிழக்கு அபிவிருத்தி ஜனநாயகக் சர்வகட்சி முறை மற்றும் அதிகாரப் பகிர்வு முறை உள்ளிட்ட 7 விடயங்கள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்த வலியுறுத்தியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தேசிய பாதுகாப்பு ஊடகமத்திய நிலையத்திற்கு நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இணைத் தலைமை நாடுகளிடம் வலியுறுத்தியுள்ளதாக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத்தை மதித்து நடக்க வேண்டும். மனித உரிமைகளை பேண வேண்டும், சிறுவர்களை படையில் சேர்ப்பதை நிறுத்த வேண்டும், அனைவருக்கும் அரசியல் நடத்த அனுமதி வழங்கவேண்டும்.

அதே நேரம் வடக்குக் கிழக்கின் அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும் உள்ளிட்ட 7 கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டதன் பின்னரே அதிகாரப்பரவலாக்கம் குறித்துப் பேசப்படும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டியதாக ஹெகலிய தெரிவித்தார்.

அதே வேளை அரசாங்கம் போர் நிறுத்த உடன் படிக்கையிலிருந்து மீறவில்லையெனவும் விடுதலைப்புலிகளின் தாக்குதலிற்கு பதில் தாக்குதல்களை பேச்சுவார்த்தை இடம் பெறும் காலத்தின் பின்னரே நடத்தும் என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மேலும் தெரிவித்தார்.

மேலும், (04 ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலை நோக்கி நாளை கப்பல் புறப்படும்

யாழிலிருந்து ஆயிரத்து 500 பயணிகளுடன் காங்கேசன்துறையிலிருந்து கப்பல் ஒன்று திருகோணமலை நோக்கி செல்லவுள்ளது. நாளைக் காலை அக்கப்பல் புறப்பட்டுச் செல்லுமென தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே யாழ்.சிவில் ஒருங்கிணைப்பு அலுவலகம் மற்றும் மாவட்ட செயலகத்தில் பதிவு செய்த வெளிநாட்டு பிரஜாவுரிமையுடைவர்கள், வெளிமாவட்ட மாணவர்கள், அரச ஊழியர்கள் மற்றும் ஏனையவர்களை இன்று காலை 7 மணிக்கு சிங்கள மகா வித்தியாலயத்திற்கு வருகை தருமாறு பலாலி ஊடகப் பிரிவு அதிகாரி விஜய சிங்க தெரிவித்தார். (எ - 1)

## கப்பலில் செல்லும் பல்கலை மாணவர்களுக்கு

கப்பலில் செல்வதற்காக பதிவு செய்த யாழ்.பல்கலைக்கழக வெளிமாவட்ட மாணவர்களையும் வவுனியா வளாக மாணவர்களையும் ப்லகலைக்கழக வளாகத்தில் இன்று காலை 9 மணிக்கு ஒன்று கூடுமாறு அழைக்கப்பட்டுள்ளனர். இந்த அழைப்பை யாழ்.பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் ஆர்.குமாரவடிவேல் விடுத்துள்ளார். (ச-5)

## பிணையில் எடுத்த வாகனத்தில் திடீரென குண்டு வெடித்தது!

### மூவர் பலி; இருவர் காயம்

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் நேற்று மதியம் வான் ஒன்றில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் மூன்று பொதுமக்கள் உயிரிழந்தனர். மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

வவுனியா பொலிஸ் நிலையத்தில் ஒரு மாத காலமாக விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்த வாகனம் நேற்று அதன் உரிமையாளரிடம் பிணை அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டது.

பொலிஸாரால் அவ் வாகனம் ஒப்படைக்கப்பட்டு சுமார் அரை மணி நேரத்திற்குப் பின்னர் இக் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இதில் மூவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்ததாகவும் ஏனைய இருவரும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச)

## ஜெனீவாவில் பேசுவதற்கு விடுதலைப்புலிகள் இணக்கம்

(கிளிநொச்சி)

அரசுடன்ான சமாதானப் பேச்சுக்களை ஜெனீவாவில் மேற்கொள்வதற்கு விடுதலைப்புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சியில் நேற்று தமிழ்ச்செல்வனைச் சந்தித்த இலங்கைக்கான நோர்வேத் தூதுவர்ஹான்ஸ் பிறட்ஸ்கரிடம் இவ் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் 29 ஆம்திகதிகளில் பேச்சுக்களில் ஈடுபட விடுதலைப்புலிகள் இணக்கம் தெரிவித்தபோது நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவிலேயே பேச்சுக்கள் இடம்பெற வேண்டும் எனத் தெரிவித்திருந்தனர்.

எனினும் அரசாங்கம் ஜெனீவாவிலேயே பேச்சுக்களை நடாத்த இணங்கியிருந்தது. இந்நிலையில் நேற்றுக் கிளிநொச்சிக்குச் சென்ற நோர்வேத் தூதுவரிடம் பேச்சுக்களை ஜெனீவாவில் நடத்த விடுதலைப்புலிகள் இணங்கியுள்ளனர்.

இதேவேளை (04 ஆம் பக்கம் பார்க்க)

# இடம்பெயர்ந்த மாணவர்கள் கல்வியை தொடர நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட அசாதாரண சம்பவங்களால் இடம்பெயர்ந்துள்ள மாணவர்கள், தாங்கள் தங்கியுள்ள இடத்திற்கு அருகிலுள்ள பாடசாலைகளில் கற்றல் செயற்பாட்டைத் தொடரலாம் என யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் வி.ரி. செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

அசாதாரண சூழ்நிலைகளினால் இடம்பெயர்ந்த மக்கள் பாடசாலைகளிலும் தேவாலயங்களிலும் தங்கியுள்ளனர்.

இதனால் அக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் கல்வியைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து கல்விப் பணிப்பாளர் இந்த நடைமுறையை அறிவித்துள்ளார்.

அவர்களுக்கான கற்றல் உபகரணங்களை யுனிசெவ் நிறுவனத்தினூடாக வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (து-133)

# க.பொ.த. உயர் தர பெறுபேறுகள்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி

*கணிதத் துறை*

தே.கவிதாஸ் 2ஏ பி, து.சிந்திகா ஏ 2பி, ச.கார்த்தீபன் ஏ பி சி, ம.கஜேந்தினி ஏ 2சி, த.பிரசாத் பி 2சி, த.தறோபன் பி 2சி.

*விஞ்ஞானத் துறை*

அ.குஷாந்தினி பி 2சி.

*வணிகத் துறை*

க.சுரேந்திரன் ஏ 2பி, மு.நிந்துஜா 2ஏ சி,து.தர்மதா ஏ பி சி; பா. ஜெனட் சுதர்சினி ஏ பி சி, த.தயாளவன் ஏ 2சி.

*கலைத்துறை*

வி.ஜீவிதா 3ஏ,பூ.சுயந்தன் 3ஏ,ம.மதுரா 2ஏ பி, யோ. காயத்திரி 2ஏ பி, இ.ஸ்ரீபன் 2ஏ பி, நி.துஷ்யந்தன் ஏ 2பி, த.பவீந்திரன் 2ஏ சி, மு.நிலானி 2ஏ சி, ச.சஜிதா 2ஏ சி, சி.நந் தினி ஏ 2பி, சு.யூட் திலீபன் ஏ பி சி, க.சஞ்சுதன் ஏ் பி சி, மு.தனுஷானந்தன் ஏ பி சி, ஆ.சோபனா ஏ பி சி, அ.அமன்டா மேரி ஏசியூலா ஏ பி சி, அ.திஷானி ஏ பி சி, மு.மொனிக்கா 3பி, ச.இளமதி ஏ 2சி. (ச)

# தட்டுப்பாடான மருந்தைப் பெற பதிவுகளை மேற்கொள்ளலாம்

யாழ்ப்பாணத்தில் பெற முடியாத மருந்துகளை கொழும்பிலிருந்து பெற்றுத் தருவதற்கு யாழ். சுகாதார சேவைகள் பணிமனை ஏற்பாடு செய்துள்ளது.இது தொடர்பாக யாழ்.சுகாதார சேவை கள் பிரதி மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் வெளியிட்டுள்ளஅறிக்கை வருமாறு;

சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை பெற்ற பல நோயாளர்களின் வேண்டுகோளின் பேரில் அரச வைத்தியசாலைகளிலும் யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் மருந்தகங்களிலும் கிடைக்காத மருந்துகளை கொழும்பிலிருந்து பெற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்திருந்தோம்.

அதேபோல வேறு சில நோய் நிலைகளுக்கான இங்கு பெற முடியாத மருந்துகளை பெற்றுத் தருமாறு பல நோயாளர்களும் வைத்திய நிபுணர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இன்றைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு இந்த மனிதாபிமான உதவியை மீண்டும் ஒரு முறை ஏற்பாடு செய்யவுள்ளோம்.

அரச வைத்தியசாலைகளிலோ அல்லது யாழ்.மாவட்ட தனியார் மருந்தகங்களிலோ கிடைக்காத மருந்துகளை கொழும்பிலிருந்து தருவிக்க விரும்பும் நோயாளர்கள் தமக்குத் தேவையான மருந்துகளின் விபரங்களை வைத்தியசாலை வீதியிலுள்ள பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் உடனடியாகப் பதிவு செய்து அதற்கான பணத்தைச் செலுத்துமாறு யாழ்.சுகாதார சேவைகள் பிரதிமாகாணப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)

# நீதிமன்றப் பதிவாளர்களுக்கு பதவி உயர்வுகள்

நீதிமன்றப் பதிவாளர் சேவையில் பதவியுயர்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வண்ணம் நீதிமன்றப் பதிவாளர் சேவை தரம் IIற்கு பதவியுயர்வுகள் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் கே.மீரா, பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் வீ.மார்க்கண்டு ஆகியோர் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்திற்கும்,

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் எஸ்.விக்னேஸ்வரமூர்த்தி பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்திற்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(ச-133)

ஓ பரிசுத்த ஆவியே!

உமக்கு நன்றி

உலக இரட்சகரான இயேசுவே
நீசப் பாவிகள் மேல்
அளவில்லா இரக்கம் உள்ளவரே
முடியாத காரியங்களை
கைகூடப் பண்ணியவரே
எங்கள் இயேசுவே
எங்கள் மன்றாட்டை கேட்டருளும்.

(மூன்று முறை சொல்லவும்) (c-516)

## அறிவித்தல்

## பெயர் மாற்றம்

விநாயக முதலியார் வீதி, பருத்தித்துறையில் வதியும் சின்னத்தம்பி சூரியஜெயபாபு கைம்பெண், ஜீவராணியும், மார்க்கண்டு மகள் ஜீவராணியுமாகிய நான் 02.11.1993 இல் ஆதார வைத்திய சாலையில் பிறந்த 'சூரியஜெயபாபு புரட்சி' என்னும் எனது மகனின் பெயரை மாற்றி அப் பெயருக்குப் பதிலாக 'சூரியஜெயபாபு சூரியராஜ்' என்னும் பெயரை இட்டு 2006 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 5ஆம் திகதியிலிருந்து எல்லாக் கருமங்களுக்கும் ஆவணங்களிலும் பாவிப்பதாக இத்தால் பொதுமக்களுக்கு அறியக் கொடுக்கின்றேன்.

சூ.ஜீவராணி
ஒப்பம்: சூ.ஜீவராணி
தாய்.

(c-517)

## "வானத்து நிலவே, எங்கள் அதிபரிடம் சென்று கல்லூரித் தாயவளின் வணக்கத்தைச் சொல்லு"



அமரர் நடராசா சிவகடாட்சம்
B.Sc, Dip.in. Edu, SLPS I
(முன்னாள் அதிபர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)

"இது கண்ணீர் அஞ்சலி அல்ல முதலாம் வருட நினைவுப் பூக்களும் அல்ல"
"விண்ணில் உள்ள தனது மைந்தனுக்கு மண்ணில் இருந்து கல்லூரி அன்னை அனுப்பும் வாழ்த்து மடல்"
"எங்கள் அதிபர் இறக்க வில்லை"
"கல்லூரி மைந்தர்களின் இதயத்தில் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்"
"இது தான் உண்மை"
"கல்லூரி வளாகத்தில் பதிந்த அதிபரின் பாதச்சுவடுகள் எப்பொழுதும் எங்களை ஆசீர்வதிக்கின்றன"
"அகவை அறுபதில் எங்கள் அதிபரை மங்கல வாத்தியங்களுடன் அழைத்து வந்து மலர்மாலைகளை அதிபரின் கழுத்தில் மலையாகக் குவித்து புகழ் மாலை சூட்டி அழகுபார்க்க எண்ணியிருந்தோம்"
"எளிமையையே என்றும் விரும்பும் எங்கள் அதிபர் எல்லோரையும் ஏமாற்றிவிட்டு மலர்வளையங்கள் புடைசூழ மகிழ்ச்சியுடன் விண்ணுலகம் சென்று விட்டார்
"சிரிப்பு" இது சிந்திக்கத் தெரிந்த மனித குலத்துக்கே சொந்தமான கையிருப்பு"
"எங்கள் அதிபரும் ஒரு நாள் காலைப் பிரார்த்தனையில் அட்டகாசமாகச் சிரித்துக் கொண்டிருந்தார் அதிபரின் 54 வது பிறந்த நாள் வாழ்த்துக்களை மாணவர்கள் பலத்த கரகோஷம் செய்து தெரிவித்தபோது."
"தமது 55 வது பிறந்த நாளை மகிழ்ச்சியுடன் விண்ணுலகில் கொண்டாடுவதை நினைத்துத்தான் எங்கள் அதிபர் அன்று அட்டகாசமாகச் சிரித்தார் போலும்"
"அபரிமிதமான திறமையும் விடா முயற்சியும் மிக்க எமது புதிய தலைமைத்துவத்துக்கு என்றும் நாம் கைகொடுத்து எங்கள் கல்லூரி அன்னையின் புகழை வானுயர ஓங்கச் செய்வோம்"
"இதுவே எங்கள் அதிபர் சிவன் கடாட்சத்துக்கு நாம் செலுத்தும் நன்றிக்கடன் ஆகும்"

நலன்புரிக் கழகம்,
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யாழ்/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

(C-508)

மனிதர்களை இழிவாக நடத்த நாம் முற்பட்டால், பகுத்தறிவும் கருணையும் நம்மிடம் இல்லை என்றால், நம்மை மட்டுமல்ல கடவுளையே அவமதிப்பவர்களாவோம். -டாக்டர் இராதாகிருஷ்ணன்

வலம்புரி

# நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சரின் பொருத்தமற்ற பேச்சு

ஏ-9பாதையைத் திறப்பதாயின் விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டும் என நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் எக்கநாயக்க கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளின் அரசியல் புலம் மற்றும் விடுதலைப் போராட்ட வரலாறு பற்றி தெரிந்த எவருமே நெடுஞ்சாலைப் பிரதி அமைச்சர் எக்கநாயக்க போல் கூறமாட்டார்கள் என்பது உண்மை.

ஆயுத ஒப்படைப்பு என்பது எக்காலத்திலும் சரிவராது என்பது தெளிவான முடிபு. நிலைமை இவ்வாறாக இருக்கும் போது ஏ-9பாதையைத் திறப்பதற்கு எவ்வகையிலும் எக்காலத்திலும் பொருத்தமில்லாத நிபந்தனைகளைக் கூறுவது அறியாமை மட்டுமன்றி அதனால் பேரிழப்புக்களும் ஏற்படலாம்.

கூட்டத்தில் பேசுவதற்கும் பேச்சுக்காக-கைதட்டுப்பெறுவதற்கும் எக்கநாயக்காவின் உரை உதவுமேயன்றி அதனால் வேறு என்னதான் பயன்?

பொறுப்பான பதவிகளில் இருப்பவர்கள் முதலில் பொறுப்பாகப்பேசுவதை உறுதி செய்து கொள்ள வேண்டும். அதைவிடுத்து எப்படியும் எப்போதும் எதையும் பேசலாம் என்ற நிலைமைகள் பிரச்சினைகளை மென்மேலும் சிக்கலாக்குமேயன்றி அதிலிருந்து விடுபடுவதற்கு அவை வழிகோல மாட்டாது.

ஏ-9பாதையைத் திறப்பது என்பது பொதுமக்களின் அத்தியாவசிய தேவையுடன் கூடியதாகும். 2002 ஆம் ஆண்டுக்குப் பின்னர்-ஏ-9பாதை போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்ட பிற்பாடு, அந்தப் பாதையால் தினசரி சென்று வந்த பயணிகளின் எண்ணிக்கை மற்றும் வாகனங்களின் எண்ணிக்கையை பரிசீலனை செய்தால் ஏ-9பாதைக்கு ஈடாக எதனையுமே முன்வைக்க முடியாது என்னும் உண்மையை உணர முடியும்.

ஏ-9பாதை மூடப்பட்டது யாரால்? ஏன் மூடப்பட்டது என்ற கேள்விகள் தேவையற்றவை. ஏ-9பாதை மூடப்பட்டதனால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை ஆய்வு செய்வதே நல்லாட்சிக்கு அழகு.

அவ்வகையில் இன்று யாழ்.குடாநாட்டில் நிலவும் உணவுத் தட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு சிக்கல்களுக்கு ஏ-9பாதை தடைப்பட்டதே காரணமாகும்.

எத்தனையே நோயாளர்கள் மற்றும் வெளிமாவட்டங்களுடன் பல்வேறு தொடர்பைக் கொண்டவர்கள் பாதை மூடப்பட்டதனால் கொழும்புக்குச் சென்று சிகிச்சை பெற முடியாமலும் வெளியிடத் தொடர்புகளை பெற முடியாமலும் தவியாய்த் தவிக்கின்றனர்.

இந்நிலையில் நெடுஞ்சாலைகளின் பிரதி அமைச்சர் 'விடுதலைப்புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்தால் மட்டுமே ஏ-9பாதையைத் திறக்க முடியும்' என்று கூறுவாராயின் அவர் யாழ்.குடாநாட்டு மக்களின் அவல நிலைமை இம்மியும் கருத்தில் கொள்ள வில்லை என்பதே பொருளாகும்.

இது ஒருபுறம்இருக்க, மறுபுறத்தில் முகமாலையிலுள்ள படையினரின் முன்னரங்கப் பகுதியில் தாக்குதலை நடத்துவதில்லை என விடுதலைப்புலிகள் உறுதியளித்தால் ஏ-9பாதையைத் திறப்பது பற்றி பரிசீலிக்க முடியும் என பாதுகாப்புச்சார் பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

ஒரு அரசு, இரண்டு அமைச்சர்கள், ஒரே விடயத்தில் இரு வேறுபட்ட கருத்துக்கள் இதை ஊர்மொழியில் கூறுவதாயின் 'தலையைப் பிய்த்துக் கொள்ள வேண்டும் போல் இருக்கிறது' எனலாம்-

இத்தகையஇருவேறுபட்ட கருத்துக்கள் அண்மையில் கூறப்பட்டுள்ளது. நிபந்தனையற்ற பேச்சுகளுக்கு அரசு தயார் என அரச சமாதானப் பேச்சாளர் பாலித ஹோகன்ன கூற, நிபந்தனையற்ற பேச்சுக்கு அரசு ஒருபோதும் முன்வராது என அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்திருந்தார்.

இவ்விதம் முன்னுக்குப் பின் முரண்பட்ட கருத்துக்கள், நேரத்துக்கு ஒரு பேச்சு என்றிருந்தால் அவற்றை மக்கள் எப்படித்தான் நம்புவார்கள்.

பேசுவது எல்லாம் தமது திறமை என்று பேசாமல், இந்த நாட்டில் நிரந்த சமாதானம் வேண்டும் என்ற நினைப்போடு கதைப்பது எதிர்கால அமைதிக்கு ஆரோக்கியமாக அமையுமல்லவா?

# தாக்குதல்கள் தொடர்ந்தால் பதில் தாக்குதலும் தொடரும்

## பிரதமர் தெரிவிப்பு

பேச்சுவார்த்தை மூலமாக தீர்வு காண்பதற்கு அரசாங்கம் எந்நேரத்திலும் தயாராகவே இருக்கின்றது. பேச்சுவார்த்தைக்கான திகதி குறிப்பிடப்பட்டாலும் நாடளாவிய ரீதியில் நிறுவப்பட்டுள்ள சோதனைச் சாவடிகள் எக்காரணம் கொண்டும் அகற்றப்படமாட்டாது என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

பேச்சுக்கான அழைப்பு கிடைத்திருக்கின்ற போதும் இராணுவத்தின் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டால் பதில் தாக்குதல்கள் நடத்தியே தீருவோம் என்றும் அவர் சொன்னார்.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் இரண்டாவது காரியாலயத்தை கண்டியில் நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், பேச்சுவார்த்தைக்கான திகதி குறிப்பிட்ட பின்னரும் எம்மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனை கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இராணுவத்தின் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றபோதெல்லாம் பதில் தாக்குதல்கள் கட்டாயமாக நடத்தப்படும்.

அதனையே இலங்கைப் படையினர் தற்போது மேற்கொண்டு வருகின்றனர். பேச்சுவார்த்தைக்கு ஆயத்தமாகி விட்டோம் என்பதற்காக சோதனைச் சாவடிகளை அகற்றி விட முடியாது. சோதனைச் சாவடிகள் மூலமாகவே நாட்டினதும் மக்களினதும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து வேலை செய்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அதேபோல் சகல கட்சிகளையும் இணைத்து கொண்டு பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அரசாங்கத்தின் கதவு திறந்தே இருக்கிறது என்றார். (ச-5)

# நாளாந்தக் கப்பல் சேவைக்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையே நாளாந்தம் கப்பல் சேவையை நடத்த பாதுகாப்பு அமைச்சர் திட்டமிட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஏ-9பாதை மூடப்பட்டுள்ள நிலையில் கப்பல் போக்குவரத்தை நாளாந்தம் மேற்கொள்ள முடிபெடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை கப்பல் மூலமாக யாழ்.வருவதற்காக வவுனியா, மன்னார் மாவட்டங்களில் தங்கியுள்ளசுமார் 575 யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் நேற்று திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக வவுனியா மாவட்ட அரசா ங்க அதிபர் சி.சண்முகம் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் பதிவு செய்த 800 பயணிகளையும் மன்னார் மாவட்ட செயலகத்தில் பதிவு செய்த 200 பயணிகளையும் கப்பலில் அனுப்புவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் இடவசதி இன்மை காரணமாக மன்னாரில் இருந்து வந்த 25 பயணிகளையும் வவுனியாவில் இருந்து வந்த 550 பயணிகளையும்மாத்திரமே அனுப்பி வைக்க முடிந்தது எனவும் அரச அதிபர் தெரிவித்துள்ளார். (ச-5)

# கொழும்பு சென்ற வர்த்தகரை காணவில்லை என முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

கடந்த ஓக்ஸ்ட் மாதம் 11 ஆம் திகதிக்கு முன்னர் கொழும்பு சென்ற வர்த்தகரைக் காணவில்லை என யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சீனிவாசன் வீதி கொட்டடியைச் சேர்ந்த தேவதாஸன் கமலதாஸன் (வயது-26) என்ற வர்த்தகரையே காணவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச-5)

# கொழும்பு நகைக் கடையில் ஆயுத முனையில் திருட்டு

(கொழும்பு)

கொழும்பு பொரளை மருதானை வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா நகையகத்தில் ஆயுததாரிகளால் பட்டப் பகலில் 25 லட்சம் பெறுமதியான நகை கொள்ளையிடப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் 3.25 மணியளவில் ஆட்டோ , மோட்டார் சைக்கிள் என்பவற்றில் குறிப்பிட்ட கடைக்குச் சென்ற 3 ஆயுதம் தாங்கிய நபர்கள் உரிமையாளர் பழனியாண்டியை துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்திவிட்டு நகைகளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் நடைபெறும்போது உரிமையாளருடன் பெண் ஊழியர்கள் இருவர் கடமையில் இருந்துள்ளனர். (ச-5)

# வெள்ளத்தில் கரைந்து போன நிவாரண உணவுப் பொருள்கள்

## மந்துவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கவென நலம்புரி நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த நிவாரண உணவுப் பொருள்கள் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்ட பரிதாபச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கொடிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து மந்துவில் நலன்புரி முகாமில் தங்கியிருந்த மக்களுக்கான உணவுப்பொருள்களே வெள்ளத்தால் அடித்துச்செல்லப்பட்டுள்ளது.

அவ்வுணவுப் பொருள்கள் பாதுகாப்பாக வைப்பதற்கான வசதிகள் கூடாரங்களில் இல்லாததால் இந்நிலை ஏற்பட்டுள்ளது.

அங்கு வைக்கப்பட்டிருந்த மா, சீனி உட்பட்ட பொருள்களே மழை வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுள்ளது. இதேவேளை அங்குள்ள மக்களும் போதிய வசதியின்மையால் கூடாரங்களில் வசித்து வருகின்றனர்.

தமது பரிதாப நிலைக்கு உரிய தரப்பினர் தீர்வு காண வேண்டும் என அவர்கள் கேட்டுள்ளனர். (ச-து-133)

# கப்பல் பதிவுக்கு புதிய நடைமுறை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கு கப்பலில் செல்வதற்கான பதிவுகளை மேற்கொள்வதற்குப்புதிய நடைமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவித்தலை பலாலி படைத்தலைமையகம் விடுத்துள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து கப்பல் போக்குவரத்து பயண வசதியை பெற்று திருகோணமலைக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி செல்ல உத்தேசித்துள்ள வெளிநாட்டுப் பிரஜைகள் வெளிமாவட்டங்களில் வசிப்போர் உட்பட வெளிமாவட்டங்களில் பணிபுரியும்அரசஅதிகாரிகள், ஊழியர்கள், வேறு தேவைகளுக்காகச் செல்லவுள்ளவர்கள் அனைவரும் அவர்கள் வசிக்கும் பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவ காரியாலயத்தில் இயங்கும் சிவில் நிர்வாகக் காரியாலயத்தில் விநியோகிக்கப்படும் பயணிகளுக்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து பின்பு அதை அந்தக் காரியாலயத்தில் கையளிக்க வேண்டும்.

கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டவுடன் அது தொடர்பாக ஊடகங்கள் மூலமாக அறிவிக்கப்படும். அந்தக் கப்பல்பயணம் தொடர்பான அறிவித்தலுக்கு அமைய பயணிகள் யாழ். சிவில் நிர்வாகக் காரியாலயத்திற்கு முன் அமைந்துள்ள சிங்கள மகாவித்தியாலய மைதானத்திற்குச் சமுகமளிக்கவும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# விமானப்படை முகாமுக்கு ஜனாதிபதி திடீர் விஜயம்

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலுள்ள விமானப்படை முகாமுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுக் காலை திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் றொஷான் குணதிலக்க ஜனாதிபதியை வரவேற்றார். விசேட அணிவகுப்பு மரியாதையும் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது.

கடந்த 20 வருடங்களில் கட்டுநாயக்க விமானப் படை முகாமுக்கு விஜயம் செய்த ஒரே அரசியல் தலைவர் ஜனாதிபதியாவார் என்பது குறிப்பிடத்தக்கது.

முகாமில் உள்ள இராணுவ வைத்தியசாலையையும் பார்வையிட்ட ஜனாதிபதி, மோதல்களில் காயமடைந்து அங்கு சிகிச்சை பெற்றுவரும் படை வீரர்களிடம் குசலம் விசாரித்தார்.

வைத்தியசாலையில் உள்ள குறைபாடுகள் பற்றியும் கேட்டறிந்தார். இத் திடீர் விஜயத்தில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோதாபய ராஜபக்ஷ ஆகியோரும் கலந்து கொண்டனர். (ச-5)

# 2ஆயிரம் ரூபா நாணயத்தாள் மத்திய வங்கியால் அறிமுகம்

(கொழும்பு)

நாணயப் புழக்கத்தை இலகுவாக்கும் நோக்கில் இலங்கை மத்திய வங்கி இரண்டாயிரம் ரூபாய் நாணயத்தாள்களை வெளியிடத் தீர்மானித்துள்ளது. எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் இந் நாணயத் தாள்கள் புழக்கத்தில் விடப்படும் என மத்திய வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

2 ஆயிரம் ரூபாய் நாணயத் தாள் வெளியிடுவதற்கான தீர்மானம் மத்திய வங்கியினால் கடந்த 2000 ஆம் ஆண்டு மேற்கொண்டுள்ள போதும் ஆறு வருடங்கள் கழிந்து இப்போதுதான் அது நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் வரலாற்று முக்கியத்துவம்மிக்க சிகிரியா பாறையின் தோற்றமும் சிகிரியா சுவர் ஓவியமும் இத்தாளில் பொறிக்கப்பட்டுள்ளன. முன்னாள் நிதியமைச்சர் சரத் அமுனுகம மற்றும் இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் சுனில் மெண்டிஸ் ஆகியோரது கையெழுத்துக்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

இளஞ்சிவப்பு மற்றும் மண்ணிறம் கலந்ததாக அச்சிடப்பட்டுள்ள இந்நாணயத் தாளில் 2005-11-12 என்ற திகதி குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-5)



இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பொருட்களை இராணுவத்தினர் விநியோகிப்பதைப் படத்தில் காணலாம். (படம்:இராணுவ ஊடகப்பிரிவு, பலாலி)

# தேர்தல் சீர்திருத்தம் ஜே.வி.பி.எச்சரிக்கை

(கொழும்பு)

நாடாளுமன்றத்திற்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்படும். அதேநேரத்தில் நிறைவேற்று அதிகாரம்கொண்டஜனாதிபதி முறை நீடிப்பது சர்வதிகாரத்திற்கு வழிவகுக்கும் என்று ஜே.வி.பி. எச்சரித்துள்ளது.

தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுக் கூட்டத்தில் விமல் வீரவன்ச பேசியதாவது,

தற்போதைய தேர்தல் சீர்திருத்தமானது பலதரப்பட்ட கருத்துடையோர் நாடாளுமன்றத்தில் உள்நுழைய வாய்ப்புண்டு.

எமது கட்சியைப்பொறுத்தவரை நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட வேண்டும்.

பிரதமருக்கு உரிய அதிகாரம் வழங்க வேண்டும். நாடாளுமன்றத்திற்கு அதிகாரங்களை வழங்கும் தேர்தல் சீர்திருத்தத்திற்கு அப்பாலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை இருப்பதானது சர்வாதிகாரத்திற்கு வழிவகுக்கும் என்றார் விமல் வீரவன்ச. (ச-5)

# சு.ப.தமிழ்ச்செல்வனுடன் ஹான்ஸ் பிறட்ஸ்கர் சந்திப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர் நேற்றுச் சந்தித்துப் பேசினார்.

கொழும்பிலிருந்து நேற்று முற்பகல் கிளிநொச்சிக்கு ஹான்ஸ் பிறட்ஸ்கரும் தூதரகத்தை சேர்ந்த அதிகாரி ஒருவரும் சென்றனர்.

விடுதலைப்புலிகளின் அரசியல்துறை நடுவப் பணியகத்தில் நேற்று முற்பகல் 11.50 மணியளவில் தொடங்கிய இச்சந்திப் பின்போது விடுதலைப்புலிகளின் தரப்பில் காவல்துறைப்பொறுப்பாளர் பா.நடேசன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் சீ.புலித்தேவன், இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் ஆகியோர் பங்கேற்றனர்.(ச)

## ஜெனீவாவில் பேசுவதற்கு...

சுவிஸ்லாந்தில் எதிர்வரும் 28,29 ஆம் திகதிகளில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இருதரப்பும் இணங்கியுள்ளதாகவும் பேச்சுவார்த்தை தொடர்பான விடயங்களையும் அதற்கானஏற்பாடுகள் தொடர்பாகவும் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் தான் ஆராய்ந்துள்ளதாகவும் நோர் வேத் தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளுடன் ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பாக தான் அரச பிரதிநிதிகளிடம் ஆராயவுள்ளதாகவும் தெரிவித்த அவர்,ஏ-9பாதை திறப்பது குறித்தும் கூடுதல் கவனம்செலுத்தப்படுமெனவும் தெரிவித்தார். அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல பேச்சுவார்த்தை தொடர்பாக நிபந்தனைகள் ஏதாவதுவிதித்துள்ளாரா என ஊடகவியலாளர்கள் கேட்டதற்கு;

அவ்வாறான நிபந்தனைகள் எதனையும் எந்தத்தரப்பும் விதிக்கவில்லை எனவும் நோர்வே அனுசரணையாளர்கள் பரிமாறிக் கொள்கின்ற செய்திகள் மட்டுமே சரியானவை எனவும் இவர் தெரிவித்தார். (ச)

## அதிகாரப்...

நேற்று நோர்வேத் தூதுவர் ஹென்ஸ் அரசாங்கத்தின் நிலைப்பாட்டுடன் கிளிநொச்சி சென்று விடுதலைப்புலிகளின் பேச்சுவார்த்தை தொடர்பான பொருத்தப்பாடு மற்றும் நிலைவரம் குறித்து அறிந்து வரு வார்.

மாங்கேணித் தாக்குதலின் போது விடுதலைப்புலிகளால் கைதுசெய்யப்பட்ட இராணுவ வீரரை விடுதலை செய்வது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் அர சாங்கம் பேச்சுவார்த்தை நடாத்துவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

# 57ஆவது வருட நிறைவில் இலங்கை இராணுவம்

இலங்கை இராணுவத்தின் 57வது வருட நிறைவு தினம் நேற்றுக் கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு கொழும்பிலுள்ள இராணுவத்தலைமையகத்தில் நேற்றுக் காலை இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் சரத் பொன்சேகாவின் தலைமையில் விசேட வைபவம் ஒன்று நடைபெற்றது.

இவ்வைபவத்திற்கு முன்னர் சர்வமத நிகழ்வுகள் வெவ்வேறு வணக்க ஸ்தலங்களில் நடைபெற்றன. இராணுவத்தலைமையகத்தில் முதலில் இடம்பெற்ற இராணுவ அணிவகுப்பை பார்வையிட்ட தளபதி இராணுவக் கொடியை ஏற்றிவைத்தார். இராணுவ கீதம் இராணுவப்பெண்கள் அணியினால் இசைக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து இந்து, பௌத்த, கத்தோலிக்க மற்றும் முஸ்லிம் சமயங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மத குருக்கள் 57 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு இராணுவத்தினருக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.(ஏ-5)

# சு.க-ஐ.தே.க பேச்சு மே.ம.மு.வரவேற்பு

ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி இடையேயான இணக்கப்பாடானது, பற்றி எரியும் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண வழிவகுக்கும் என்று மேலக மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

அக் கட்சியின் பிரதித்தலைவர் நல்லையா குமரகுருபரன் கூறியதாவது,

இரு கட்சிகளிடையே இணக்கமான கருத்துருவாக்கம் ஏற்படுத்தப்படுவது இனப்பிரச்சினை தொடர்பான சிங்களவர்களின் ஒருமித்த கருத்தை ஏற்படுத்துவதாகும்.

இந்த இரு கட்சிகளும் 90 வீதம் சிங்களவர்களை பிரதிநிதித்துவப்படுத்துபவையாகும். சிங்களம் மட்டுமே என்ற முழக்கத்தை முன்வைத்து எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க தேர்தலில் போட்டியிட்ட போதும் வடக்கு -கிழக்கு பிரச்சினைக்கு மாவட்ட சபை பிரதிநிதித்துவ முறையை அவர் முன்வைத்தார்.

ஆனால் சிங்களக் கடும்போக்காளர்களும் பௌத்த மத அடிப்படைவாதிகளும் அதனை தடுத்துவிட்டனர் என்றார் குமரகுருபரன்.

இதனிடையே சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய தேசியக்கட்சி இடையேயான இணக்கப்பாட்டை வரவேற்பதாக கத்தோலிக்க ஆயர்கள் மாநாடு தெரிவித்துள்ளது. மேலும் இலங்கையில் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தும் நடவடிக்கையை இருகட்சிகளும் செயற்படுத்த வேண்டுமென்றும் இரு கட்சிகளிடையேயான இணக்கமானது நீண்டகால தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண உதவும் என்றும் கத்தோலிக்க ஆயர்கள் மாநாடு தெரிவித்துள்ளது. (ச-5)

# பேச்சு சுமுகமாக நடப்பதென்பது...

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கரை நேற்று சந்தித்த பின்னர் ஊடகவியலாளர்களுக்கு சு.ப.தமிழ்ச் செல்வன் தெரிவித்துள்ளதாவது;

நோர்வே தூதுவருடன் தற்போதைய நிலைமைகள் தொடர்பாகவும் முக்கியமாக அரசாங்கம் எமது தேசத்தின் மீது கட்டவிழ்த்து விட்டு இருக்கின்ற வன்முறைகள் ,படுகொலைகள் போன்றவற்றை நிறுத்தி நேர்மையான முறையில் இதயசுத்தியுடன் சமாதான முன்னெடுப்புக்குள் உள்வரவேண்டும்.

இதனை சர்வதேச சமூகம் வலியுறுத்த வேண்டும்; அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியிருக்கிறோம். ஏனெனின் அரசு ஒரு பக்கம் பேச்சுக்கு தயார் எனக் கூறிக்கொண்டு மறுபக்கத்தில் யுத்தத்தை கட்டவிழ்த்துவிட்டு பல மனித உரிமை மீறல்களை நிகழ்த்தி வருகிறது.

பெரும் மனித அவலத்துக்குள் எமது மக்கள் தள்ளப்பட்டு இருக்கின்றார்கள். அடுத்தாக முக்கியமாக இணைத்தலைமை நாடுகள்,சர்வதேச சமூகம் அனுசரணையாளர்கள் இரு தரப்பும் மோதல்களை நிறுத்தி நிபந்தனையற்ற வகையில் நேரடியாக பேசவேண்டும் என்ற கோரிக்கையை விடுத்திருந்தார்கள்.

இந்நிலையில்தான் எமது தலைமைப் பீடம் சர்வதேச சமூகத்தின் வேண்டுகோளையும் ஆலோசனைகளையும் வரவேற்று மதிப்பளிக்கும் வகையில் பேச்சுக்கான இணக்கப்பாட்டினை தெரிவித்திருந்தோம்.

ஆனால் அரசு எமது தேசத்தின் மீது பாரிய படைநடவடிக்கைகளையும், வன்முறைகளையும் அதிகரித்துள்ளது. அரசின் நடவடிக்கைகளைகள் தொடருமாயின் எமது நிலைப்பாட்டில் மீள் பரிசீலனை செய்ய வேண்டிவரும் என்பதை முன்னைய சந்திப்புக்களிலும், கடிதம் மூலமாகவும் அனுசரணையாளர்களுக்கு தெரியப்படுத்தி இருந் தோம்.

இன்றும் கூட நோர்வே தூதுவரிடம் பேச் சுக்கான இணக்கப்பாட்டினைத் தெரிவித்திருந்தாலும் இக்காலப் பகுதிகளுக்குள் அரசாங்கம் போலிச்சாட்டுக்களை வைத்துக் கொண்டு எமது தேசத்தின் மீது பாரிய படை நடவடிக்கைகளை முன்னெடுப்பார்களேயானால் எமது முடிவை மீள் பரிசீலனை செய்து எமது நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டிய சூழல் ஏற்படும் என்பதை இன்றைய சந்திப்பில் தெரிவித்திருக்கிறோம்.

பேச்சுக்காக நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் பேச்சு நடப்பதா? இல்லையா ? என்பது எமது கையில் இல்லை. சர்வதேச சமூகத்தின் கையிலும் அரசின் கையிலும் தான் உள்ளது.

சூழல்களை குழப்புகின்ற வகையில் அரசு செயற்படுமானால் எமது நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படும். வாகரைப் பகுதியில் தாக்குதல் இடம் பெற்றுக்கொண்டிருந்தபோதுதான் எமது தலைப்பீடம் கூடி தற்போதைய நிலைப்பாட்டை நோர்வே அனுசரணையாளர்களுக்கு தெரிவித்திருந்தோம்.

எதிர்வரும் நாட்களுக்குள் நடக்கப் போகின்ற விடயங்கள் தான் பேச்சுக்கான திகதிகளையோ நிகழ்ச்சி நிரல்களையோ தீர்மானிக்கக் கூடியதாக இருக்கும் என்றார்.

ஒரு வழிமுறையை அரசு தொடர்ந்தும் கடைப்பிடிக்கிறது. இனியும் கடைப்பிடிக்கும். புலிகள் தங்களைத் தாக்குகின்றார்கள் ,சீண்டுகின்றார்கள் எனக்கூறிக்கொண்டு பாரியளவிலான படை நடவடிக்கைகளையும் மக்கள் மீதான படுகொலைகளையும் தீவிரப்படுத்துகின்றார்கள்.இதற்காக நாம் இன்றும் ஒரு கோரிக்கையை முன்வைத்தள்ளோம்.

இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழு ,மோதல் நடக்கும் பகுதிகளுக்குள் நேரடியாக நின்று யார் யுத்த நிறுத்தத்தை மீறு கிறார்கள்,முதல் தாக்குதல்களை யார் தொடங்குகின்றார்கள் என்பதை நடுநிலைமையோடு அவதானித்து முடிபுகள் எடுக்க வேண்டும்.

சர்வதேச சமூகத்திடம் வேண்டுவதெல்லாம் அரசாங்கம் போலிச்சாட்டுக்களை முன்வைத்துக் கொண்டு வன்முறைகளை தூண்டி படுகொலைகளை நிகழ்த்திக் கொண்டு இருக்கின்றது என்பதை சர்வதேச சமூகம் கண்டறிந்து கொள்ள வேண்டும்.

அரசாங்கத்தின் மீது பலமான நம்பிக்கையீனம் இருக்கின்றது. குறிப்பாக மகிந்த ராஜபக்ஷ மீது பலமான சந்தேகம் இருக்கின்றது. ஆனால் சர்வதேச சமூகத்திற்கும் நாங்கள் சில வழிகளைக்காட்ட வேண்டியுள்ளது. ஒவ்வொரு ஆட்சித்தலைவர்களும் பதவிக்கு வந்து தமிழ் மக்களை ஏமாற்றினார்கள் என்பதையும் போலியாக செயற்பட்டார்கள் என்பதையும் பகிரங்கப்படுத்த வேண்டிய தேவை எமக்கு இருந்தது. அதே போன்று அரசின் போலித்தனங்களை வெளிப்படுத்த இதையொரு கடைசிச் சந்தர்ப்பமாக சர்வதேச சமூகம் கருதும் என நினைக்கிறோம்.

நோர்வேத்தூதுவர் நாம் அண்மையில் அனுப்பிய கடிதம் தொடர்பாகவும் எதிர்வரும் நாட்களில் அமைதி முயற்சிகளை முன்னகர்த்திச் செல்வதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காகவும் அண்மையில் அரச தலைவரைச் சந்தித்து கலந்துரையாடினார்.அதேபோன்று எம்முடனும் கருத்துக்களை பரிமாறவேண்டும் என்று வருகை தந்தார். கருத்துக்களை பரிமாறிக்கொண்டோம் என்றார் சு.ப.தமிழ்ச்செல்வன். (ஏ-1)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.10.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.